## சென்னை ஒலிம்பிக் அகாடமியில் அமைக்கப்பட்டுள்ள

# புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஏப்.6**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.4.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள சென்னை ஒலிம்பிக் அகாடமியின் மூன்றாவது தளத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையத்தை திறந்து வைத்தார்.**

விளையாட்டு என்பது விளையாடும் வீரர்களுக்கு மட்டுமல்லாமல் அந்த விளையாட்டு வீரர் சார்ந்த நாட்டின் பொதுமக்கள், ரசிகர்கள் அனைவருக்கும் மிகுந்த உற்சாகத்தை அளிக்க வல்லதாகத் திகழ்கின்றது. ஒரு விளையாட்டு வீரர் வெற்றி பெறும் போது, அவர் சார்ந்த நாட்டின் அனைவரும் மிகுந்த உற்சாகமும், தன்னம்பிக்கையும் கொள்கின்றனர். உலகின் முன்னணி நாடுகள் தங்களது விளையாட்டு வீரர்களை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் மிகுந்த வலிமை மிக்கவர்களாக உருவாக்கி வருகின்றனர். சர்வதேச போட்டிகளில் நமது நாட்டு விளையாட்டு வீரர்கள் வெற்றிகள் பெற்றாலும் அதிக பதக்கங்கள் வெல்ல முடியாத சூழ்நிலை உள்ளது.

**தமிழ்நாடு முன்னணி விளையாட்டுத் தலம்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டினை இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகின் முன்னணி விளையாட்டுத்தலமாக உருவாக்கி வருகின்றார்கள். அதற்காக, சென்னை மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு அரங்கங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், அதிநவீன பயிற்சி கூடங்கள் ஆகியவற்றை அமைத்து வருகின்றார்.

சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற நமது விளையாட்டு வீரர்களுக்கு போட்டி நடைபெறும் நாட்டின் சுற்றுச் சூழலுக்கேற்ப உடல் தகுதி, மன வலிமை, உளவியல் ரீதியாக தன்னம்பிக்கை, காயங்கள் ஏற்பட்டால் உடனடியாக மீண்டு அடுத்தடுத்த போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அறிவியல் ரீதியான வசதிகள் தேவைப்படுகின்றது.

**விளையாட்டு வீரர்களை மேம்படுத்தும் செயல்!**

இதனை கருத்திற்கொண்டு புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையத்தில் விளையாட்டு வீரர்களின் செயல்திறன், உடற்பயிற்சி, உடல் ஆரோக்கியம், உடலியல், உளவியல் மற்றும் விளையாட்டு மருத்துவம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவதும், உடற்பயிற்சி அறிவியலின் மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதும் நோக்கமாகக் கொண்டு அதிநவீன மருத்துவக் கருவிகள், விளையாட்டுகளின் தேவைக்கேற்ப விளையாட்டு வீரரின் உடலில் தேவைப்படும் தசைகளை வலுவேற்றும் வகையிலான சிறப்பு உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், இம்மையத்தில் மனநல நிபுணர், ஊட்டச்சத்து நிபுணர், சிறப்பு பயிற்சியாளர்கள், உளவியலாளர்கள், அதிக பயிற்சி காரணமாக ஏற்படும் தசைப்பிடிப்பை சீரமைக்கும் வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

புதிய தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையத்தை திறந்து வைத்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்கள் சர்வதேச தரத்தில் அறிவியல் ரீதியாக பயிற்சிகள் பெறுவதற்காக செய்யப்பட்டுள்ள பல்வேறு வசதிகளை பார்வையிட்டார்.

**பெரியகுளத்தில் உள்விளையாட்டு அரங்கம்!**

மேலும் தேனி மாவட்டம் பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 5.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த உள் விளையாட்டு அரங்கத்தில் நிர்வாக கட்டடம், பயிற்றுநர் அறை, விளையாட்டு வீரர்கள் தங்கும் அறை, பார்வையாளர்களுக்கான இருக்கைகள், மரத்திலான தரைதளம், உபகரணங்களுக்கான இருப்பு அறை மற்றும் ஒளிரும் மின் விளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கத்தில் கையுந்து பந்து, கூடைப்பந்து, டேபிள் டென்னிஸ், இறகுப்பந்து போட்டிகள் நடத்தவும், பயிற்சி பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ. 50 லட்சம் மதிப்பில் பளுதூக்குதல் பயிற்சி மையத்தையும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பால்வளத்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன்(எழும்பூர்), கே.எஸ்.சரவணகுமார் (பெரியகுளம்), செ.முருகேசன் (பரமக்குடி), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர்.அசோக் சிகாமணி உள்பட அரசு அலுவலர்கள், பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

## எஸ்.உமாசங்கர் தலைமையில்

# 132 ‘அ’ வட்டம்: ரங்கராஜபுரத்தில் நீர்மோர் பந்தல்!

## த.வேலு எம்.எல்.ஏ. – ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. திறந்து வைக்கின்றனர்!

சென்னை, ஏப்.6-

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.உமாசங்கர் தலைமையில் மக்கள் தாகம் தீர்க்கும் நீர்மோர் பந்தலை மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. திறந்து வைக்கின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை தென் மேற்கு மாவட்டம் இளைஞரணி சார்பில் 132 ‘அ’ வட்டத்தில் ரங்கராஜபுரம் பிரதான சாலை இருசக்கர வானகம் சுரங்கபாதை அருகில் இன்று (06.04.25, ஞாயிற்றுக்கிழமை) காலை 11.30 மணியளவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். உமாசங்கர் தலைமையில் தியாகராயர் நகர் மேற்குப் பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., ராஜா அன்பழகன் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் நீர்மோர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

எ.அஸ்வின்குமார், ஆ.மணிரத்தினம், க. மணிகண்டன், எம். மனோஜ், ம.ஜெகன், ரமேஷ் உதயா, சரவணா, ரவி பிரசாத் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு நீர்மோர் பந்தலை திறந்து வைக்கின்றனர் .

இதில் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். உமாசங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கோவை கு.இராம கிருட்டிணன் தலைமையில் – தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்தும்

# “திருவாரூர் தங்கராசு நூற்றாண்டு விழா படத்திறப்பு - சிறப்புரை”!

## அமைச்சர் க.பொன்முடி – க.திருநாவுக்கரசு – கரு. பழனியப்பன் – வாலாஜா வல்லவன் சிறப்புரை!

### மயிலை த.வேலு – கே.பி.சங்கர் – அர. திருவிடம் – வாசு விக்ரம் பங்கேற்பு!

சென்னை, ஏப். 6-

தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் ‘பெரியார் பெருந்தொண்டர் திருவாரூர் கே.தங்கராசு நூற்றாண்டு விழா’ சென்னை அன்பகத்தில் இன்று 6.4.2025 ஞாயிறு மாலை 5 மணியளவில் த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அமைச்சர் க.பொன்முடி சிறப்புரையாற்றுகிறார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்தும், பெரியார் பெருந்தொண்டர் திருவாரூர் கே.தங்கராசு நூற்றாண்டு விழா சென்னை அன்பகத்தில் கோவை கு.இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் த.பெ.தி.க. தலைவர் ஆனூர் ஜெகதீசன், துணைத் தலைவர் வழக்கறிஞர் செ.துரைசாமி, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., கே.பி.சங்கர் எம். எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகிக்க, கழகத் துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் க.பொன்முடி, திருவாரூர் தங்கராசுவின் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

இதில் திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு, திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன், கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர்கள் அர.திருவிடம், எம்.ஆர்.ஆர். வாசு விக்ரம், மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சி பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும் இதில் வழக்கறிஞர் வை.இளங்கோவன், மருத்துவர் ச.கவுதமன், பேராசிரியர் இளங்கோவன், நாகை எஸ்.எஸ்.பி. ரூசோ, வீர.மோகன், சீனி, விடுதலை அரசு, டிங்கர் குமரன், து.ரவிச்சந்திரன், லோ.மனோஜ் குமார், திரைப்பட இயக்குநர் வருண் ராசேந்திரன், தி.பெ.தி.க. ஊடகப்பிரிவு செயலாளர் ஜனா விஜய், கவிஞர் எஸ்.முனுசாமி ஆகியோர் கலந்துகொண்டு பேசுகின்றனர்.

தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் வரவேற்புரையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் ‘திராவிட நாடு’ ஆசிரியர் ஆர்.பிரசாத் நன்றி கூறுகிறார்.




நீலகிரி மாவட்டம்

புதிதாகக் கட்டப்பட்டுள்ள
அரசு மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை திறப்பு விழா

மற்றும்

ரூ.727 கோடியில்
புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

முடிவுற்ற திட்டப்பணிகள்
திறந்துவைத்தல்

அரசு நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழா





அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, உதகமண்டலம்



நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி மையம்

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 6.4.2025 ஞாயிற்றுக்கிழமை,
நேரம் : காலை 10.00 மணி
இடம் : அரசு கலைக் கல்லூரி வளாகம், நீலகிரி



சோலூர் பேரூராட்சி அலுவலகக் கட்டடம், நீலகிரி

எல்லாருக்கும் எல்லாம் !

செ.ம.தொ.இ/343/வரைகலை/2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009